19.10.2023
E.A.No.1/2023 in E.P.No.8/2022 in O.S.No.437/2009

எட்வின் ஜெகன் (P.W.1)

குறுக்கு விசாரணை :

1. அசல் வழக்கில் எனது அப்பாவின் முகவரி விக்டர், பிச்சன்விளை, சகாயநகர், கீழ்மிடாலம் என்று குறிப்பிடபட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். நான் பிறந்து வளர்ந்தது மேற்படி முகவரியில் தான். எனது பிரமாண வாக்குமூலத்திலும் மேற்படி முகவரி தான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி முகவரியில் நான் வசித்து கொண்டு இருக்கிறேன் என்றால் சரிதான். எனது அப்பா எனக்கு எழுதிக்கொடுத்த செற்றில்மென்ட் ஆவணத்தில் குறிப்பிடபட்டுள்ள சொத்து விவரம் தான் மனு சொத்தாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அசல் வழக்கை எனது அப்பாவிற்கு எதிராக சின்னதம்பி தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அசல் வழக்கில் உள்ள சொத்து எங்கள் வீட்டிற்கு பின்புறம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்து அசல் வழக்கில் உள்ள வாதி/ தீர்ப்பாணை பெற்றவருக்கு உரிமைப்பட்டது என்றால் சரிதான். எனது சொத்தை நீதிமன்ற ஆணையர் வந்து அளந்தார் என்று சொன்னால் வரவில்லை. ஆணையர் வந்து தீர்ப்பாணை பெற்றவர் இடத்தை அளந்தார் என்றாலும் மேற்படி அறிக்கை மற்றும் வரைபடத்தை அசல் வழக்கில் தாக்கல் செய்தார் என்றாலும் ஆனால் எனக்கு தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2. அசல் வழக்கு எல்கை நிர்ணயம் செய்ய வேண்டும் என்பதற்காக தான் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள மனுவிற்கும் அசல் வழக்கில் உள்ள சொத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றாலும் அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்டுள்ள தீர்ப்பாணையின் அடிப்படையில் வாதி/தீர்ப்பாணை பெற்றவரின் இடத்தின் எல்கையை தான் நிர்ணயம் செய்ய நிறைவேற்றல் மனுவில் பரிகாரம் கோரியுள்ளதால் இம்மனுவில் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. அசல் வழக்கில் எனது அப்பாவான பிரதிவாதிக்காக ஸ்டீபன் என்பவர் வழக்கை நடத்தி வந்தார் என்றால் சரிதான். அசல் வழக்கில் நான் கட்சி இல்லை என்றால் சரிதான். அவர்கள் என்னை அசல் வழக்கில் கட்சி சேர்க்கவில்லை. தீர்ப்பாணை பெற்றவர் தீர்ப்பாணை படி அவரது சொத்தில் எல்கை நிர்ணயம் செய்ய எனக்கு ஆட்சேபனை உண்டா

என்றால் இல்லை. மேலும் மனுவின் நான் கோரிய பரிகாரம் எனக்கு வழங்க கூடியது அல்ல என்பதால் மனு எதிர்மனுதாரின் செலவுதொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.